State aid to Small-scale Industries

* 29 *Q.*—SRI A. R. SUBBIAH MUDALIAR (on behalf of SRI C. MUTHIAH) : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) எந்தெந்த சிறிய கைத்தொழில்களுக்கு கடன் உதவி அரசாங்கம் 1958–59-ல் அளித்திருக்கிறது ?

(ஆ) அதன் நகல் அபிவிருத்தி அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) A statement[a] showing particulars of Small-scale Industries, the number of units that received aid and the amount disbursed to each category, for the period from 1st April to 31st December 1958 is placed on the table of the House.

(*b*) No, Sir.

SRI A. R SUBBIAH MUDALIAR : சில பகுதிகளில் கடன்களுக்கான மனுக்கொடுத்து ஒரு வருஷத்துக்கு மேலாகியும் கடன் கொடுக்கப்படவில்லை. மனு கொடுத்த தேதியிலிருந்து குறிப்பிட்ட தவணைகளுள் கடன் சாங்க்ஷன் செய்யப்பட வேண்டும் என்ற முறை N. S. I. C. கடன்கள் கொடுப்பதிலே அனுஷ்டிக்கப்படுகிறது. அதுபோல், 'ஸ்டேட் எய்ட் டு இண்டஸ்ட்ரீஸ் ஆக்ட்'டின் கீழ் கொடுக்கப்படும் உதவியையும் ஒரு குறிப்பிட்ட தவணைகளுள் கொடுப்பதற்கு சர்க்கார் யோசிப்பார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : சில கடன்கள் மனுக் கொடுத்த இரண்டு மூன்று மாதங்களுக்குள்ளே கொடுக்கிறோம். சில கடன்கள் கொடுப்பதில் காலதாமதம் ஆகிறது. தகுந்த சொத்து ஜாமீன் இல்லாத இடத்திலெல்லாம் தாமதம் ஆகிறது. அவர்கள் கொண்டுவருகிற ஸ்கீம் நல்ல ஸ்கீமாக இருக்கிறதா என்பதைப் பரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது. அதையெல்லாம் பார்த்து பரிசீலனை செய்யும்போது சில கேஸ்களில் தாமதம் ஆகிறது. கனம் அங்கத்தினர் தனியாகக் கேள்வி போட்டால், மொத்தக் கடன் கொடுத்தது எவ்வளவு, எத்தனை கேஸ்களில் தாமதம் ஆயிற்று என்று சொல்ல முடியும்.

SRI J. MATHA GOWDER : நீலகிரி ஜில்லாவிலே அதிகமாக டீ உற்பத்தி செய்கின்ற தொழில்கள் இருந்தும், இந்தத் தொழிலுக்கு எந்தவிதமான கடனும் கொடுத்ததாகக் காணப்படவில்லை. டீ உற்பத்தி சாலைகள் இந்த ஜில்லாவில் அதிகமாக இருக்கும் காரணத்தால், இந்தத் தொழிலுக்கும் சர்க்கார் உதவி கொடுப்பதற்கு ஏதாவது வழிவகை செய்ய முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : டீ உற்பத்தி பண்ணுகிறவர்களுக்கு ஏராளமான பணம் வேண்டும். ஸ்டேட் எய்ட் டு இண்டஸ்ட்ரீஸ் ஆக்ட் பிரகாரம் கொடுத்து அவர்களுக்குக் கட்டுப்படியாகாது.

Harijan Welfare Schools in Chingleput District

* 30 *Q.*—SRI K. VINAYAKAM (on behalf of SRI S. B. ADITYAN) : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) how many Welfare Schools are conducted by the Harijan Welfare Department in Chingleput district;

---

[a] Printed as Appendix IX on page 52 infra.